இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05-06-2025

# இழிவான சார்...!

சென்னை மாணவி ஒருவருக்கு நடந்த பாலியல் வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நீதிபதி இராஜலட்சுமி வழங்கி இருக்கிறார்.

சென்னை மாணவி ஒருவர் மீது பாலியல் வன்கொடுமை கடந்த டிசம்பர் 23 ஆம் தேதி நடந்தது. அவர் மறுநாள் கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அவர் கொடுத்த புகாரை வைத்து ஞானசேகரன் என்பவர் அன்றைய தினமே கைது செய்யப்பட்டார். பிப்ரவரி மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, மே 28 ஆம் தேதி ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது. ஜூன் 2 ஆம் தேதி குற்றவாளிக்கான தண்டனை தரப்பட்டது.

குற்றவாளி ஞானசேகரனுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை குறைப்பின்றி ஆயுள் தண்டனை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் வேறு எந்த சலுகை அடிப்படையிலும் அவர் சிறையை விட்டு வெளியே செல்ல முடியாது. அவர் சிறைக்குள்தான் இருக்க வேண்டும். அதுதான் இந்தத் தீர்ப்பின் சிறப்பம்சம்.

ஒவ்வொரு பிரிவிலும் இருக்கக் கூடிய அதிகபட்ச தண்டனையை நீதிபதி வழங்கியுள்ளார். இதுதவிர அபராதத் தொகையை இழப்பீடாக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு ஆயுள் தண்டனையும், விருப்பத்துக்கு மாறாக அத்துமீறி நடத்தலுக்கு மூன்று மாதங்களும், சட்டவிரோதமாக தடுத்து நிறுத்துதலுக்கு ஒரு மாதமும், உடலில் காயத்தை ஏற்படுத்துதல் என்ற குற்றத்திற்கு ஒரு ஆண்டு சிறை தண்டனையும், பாலியல் வன்கொடுமைக்கு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும், கடுமையாக தாக்குதல் என்ற குற்றத்திற்கு ஏழு ஆண்டு சிறை தண்டனையும் கொலை மிரட்டல் விடுத்தல் என்ற குற்றத்திற்கு ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையும், பாலியல் குற்றம் தொடர்பான ஆதாரங்களை அழித்தல் என்ற குற்றச்சாட்டில் 3 ஆண்டு சிறையும் விதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 11 பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதில் ஒவ்வொரு பிரிவுக்கும் தண்டனை விவரங்கள் தனித்தனியாக அறிவிக்கப்பட்டன.

புகார் கொடுத்த அன்றே குற்றவாளி கைது செய்யப்பட்டதும், விசாரணையில் அனைத்து ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டதும், உடனடியாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதும், 157 நாளில் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்ததும் தமிழ்நாடு அரசுக்கும் காவல் துறைக்கும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுத் தந்துள்ளது.

இதனை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த சம்பவத்தை வைத்து, 'தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை' என்று சொல்லி வண்டியோட்ட நினைத்த பழனிசாமியின் எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது. ஆனாலும் வெட்கமில்லாமல், 'யார் அந்த சார்' என்று கேட்டுக் கொண்டுள்ளார் பழனிசாமி. இந்த சம்பவத்தில் ஞானசேகரன் மட்டும் தான் குற்றவாளி என்பதை காவல் துறை சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நிரூபித்து விட்டது. அதனை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டு விட்டது.

நீதிபதி இராஜலட்சுமி அவர்கள் வழங்கிய தீர்ப்பில், " **'சார்' என்ற வார்த்தையை பாதிக்கப்பட்ட பெண்ணை ஏமாற்றும் நோக்கில் தான் ஞானசேகர் பயன்படுத்தி உள்ளார். தன்னை பல்கலைக்கழக ஊழியர் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி திசை திருப்பவும், மிரட்டவும் 'சார்' வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இது அறிவியல் பூர்வமாகவும், நேரடி சாட்சிகள் மூலமாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஞானசேகரன் மட்டுமே குற்றவாளி என்ற அரசுத் தரப்பு வாதத்தை நீதிமன்றம் முழு மனதுடன் ஏற்று கொள்கிறது**" என்று குறிப்பிட்டுள்ளார். இதனை சேலஞ்ச் செய்கிறாரா பழனிசாமி?

இந்த வழக்கின் அரசுத் தரப்பு வழக்கறிஞரான மேரி ஜெயந்தி அளித்துள்ள பேட்டியிலும் இதனை மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

**"இந்த பாலியல் வழக்கில் இன்னொரு நபர் சம்பந்தப்பட்டிருக்கிறாரா? என்றெல்லாம் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் ஒன்றை நான் தெளிவுபடுத்த நினைக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை குற்றவாளியின் செல்பேசிதான் இவ்வழக்கின் முக்கிய ஆயுதம். அந்த செல்பேசி, நீதிமன்றம் மூலமாக தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டு, அதில் என்னென்ன இருக்கிறது என்றெல்லாம் ஆய்வு செய்யப்பட்டது. பாலியல் சம்பவம் நடந்த 23ஆம் தேதி, அந்த செல்பேசி Flight Mode இல் போடப்பட்டிருந்தது என்பது Forensic Science Laboratory (FSL) தயாரித்த ஆவணத்தின் வழி உறுதியானது.**

**செல்பேசி Flight Modeல் போடப்பட்டிருந்தது ஆவணம் மூலமாகவும், நிபுணரின் வாய்மொழி சாட்சியாகவும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**அந்த செல்பேசியில் பயன்படுத்தப்பட்டிருந்த Sim Airtel Sim. அந்த நிறுவனத்தின் அலுவலர், நீதிமன்றத்திற்கு நேரடியாக வந்து 'அந்த தொலைபேசியில் 6.23 மணிக்குதான் முதல் அழைப்பு வந்துள்ளது. அதற்கு பிறகு 8.52 மணி வரைக்கும் எந்த அழைப்பும் இல்லை' எனத் தெளிவாக தெரிவித்துள்ளார்.**

**முதன்மை குற்றவாளியுடன் மற்றொருவர் தொடர்பில் இருக்கிறார் என்று நீதிமன்றம் கருதினால், அந்த மற்றொருவரையும் அழைத்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றத்திற்கே அதிகாரம் உண்டு. ஆனால், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எல்லாம் திருப்திகரமாக இருந்த காரணத்தால்தான், ஒருவர்தான் இதில் குற்றவாளி என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டு, ஒருவர் மீது மட்டும் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து, இந்தத் தீர்ப்பைக் கொடுத்துள்ளது. இதற்கு மேலும், இதுகுறித்து பேசினால் அது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும்"** என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் தெளிவுபடுத்தி இருக்கிறார். இதில் பழனிசாமி என்ன குறை கண்டார்?

ஞானசேகரனின் பின்புலத்தில் யாரும் இல்லை. சம்பவம் நடந்த போது, அவரது செல்போன் ப்ளைட் மோடில் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், பாதிக்கப்பட்ட மாணவியை மிரட்டுவதற்காக, தானும் பல்கலைக்கழக ஊழியர்தான் என ஏமாற்றும் வகையில், ப்ளைட் மோடில் இருந்த செல்போனில், பேசுவது போல ஞானசேகரன் ஏமாற்றியிருக்கிறார்.

அவரது போனுக்கு, சம்பவத்தின்போது எந்த அழைப்பும் வரவில்லை, அவரும் எந்த அழைப்பையும் மேற்கொள்ளவில்லை என்பது செல்போன் சேவை நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றச்சம்பவம் நடந்த இரண்டரை மணி நேரம் எந்த தொடர்பும் அவரது போனில் இருந்து இல்லை. இரவு 8.52 மணிக்குத்தான் முதல் எஸ்.எம்.எஸ். வருகிறது. அதுவும் மிஸ்டு கால் அழைப்பு தொடர்பான எஸ்.எம்.எஸ். அது. ஆனால் திரும்பத் திரும்ப பொய் சொல்லி, இந்த விவகாரத்தைக் கிளறிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

ப்ளைட் மோடில் இருந்தால் போன் போகாது, போன் வராது என்பதை பழனிசாமிக்கு சொல்லத் தேவையில்லை. சேலம் டூ சென்னை அடிக்கடி வந்து போகிறவர்தான் அவர். அடுத்த தடவை வரும் போது பிளைட் மோட் போட்டுவிட்டு, போன் போகிறதா என்பதை அவர் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். பக்கத்து இருக்கைக்காரர்தான் இவரைப் பரிதாபமாக பார்ப்பார்.

**பழனிசாமி சட்ட மேதையாக இருந்தால், இந்த விசாரணையில் ஏதாவது விடுபட்டுள்ளது என்று சொல்லத் தயாராக இருக்கிறாரா? இந்த விவகாரத்தில் இழிவான அறிக்கைகளை வெளியிட்டு, 'இழிவான சார்' ஆகக் காட்சியளிப்பது பழனிசாமிதான்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழி நாள் விழாவில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழி நாள் விழாவில், தமிழ்ச் செம்மொழி குறித்த கண்காட்சியினைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில்

# கட்டணமின்றி நிரந்தர உறுப்பினர் சேர்த்தல்!

### வணிக வரித் துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 5-

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் கட்டணமின்றி நிரந்தர உறுப்பினர் சேர்த்தல் நடைபெறுகிறது என்று வணிக வரித் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வணிகவரி ஆணையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் வணிகர் பெருமக்களின் நலனுக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக 1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று வரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற/பதிவு பெறாத வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 88,496 ஆகும்.

மே 5, 2025ஆம் ஆண்டு மதுராந்தகத்தில் நடைபெற்ற வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (GST) சட்டத்தில் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத வணிகர்கள் வருடத்திற்கு "விற்றுமுதல் அளவு" (Turn Over) ரூ.40 இலட்சம் வரை வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு வாரியத்தின் பலனை பெறும் வகையில் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கான கட்டணத் தொகையான ரூ 500/ - செலுத்துவதிலிருந்து 01.06.2025 முதல் 30.11.2025 வரையிலான ஆறு மாத காலத்திற்கு விலக்களிக்கப்படுகிறது.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# "தமிழ்ச் செம்மொழி"- மாபெரும் கண்காட்சி!

### ஜூன் 9 வரை நீட்டிப்பு!

சென்னை, ஜூன் 5-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.6.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆம் பிறந்த நாளான செம்மொழி நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ச் செம்மொழி நாளினை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரிய ஒளிப்படங்களின் தொகுப்பு, தமிழ்ச் செவ்வியல் முதல் பதிப்பு நூல்கள், காலந்தோறும் தமிழ் மற்றும் தமிழ் மொழியின் வரலாறு, தமிழர் தொன்மை குறித்த ஓலைச்சுவடிகள் அடங்கிய "தமிழ்ச் செம்மொழி" கண்காட்சியினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், இக்கண்காட்சியின் சிறப்புகளை பொதுமக்கள் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் ஒரு வார காலத்திற்கு நீட்டிக்குமாறு தெரிவித்துள்ளார்கள். இக்கண்காட்சியில் செம்மொழியான தமிழின் வரலாறு, சிந்து வெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டு குறியீடுகளும், தமிழகத்தில் தமிழில் எழுத்துப் பொறிப்புக் கிடைத்த இடங்கள், சங்க கால கல்வெட்டுகள், காலம் தோறும் தமிழ், பானை ஓடுகளில் தமிழில் எழுத்துக்கள் பற்றிய குறிப்பு, வைகை நதி வரும் தங்கத்தில் தமிழ் எழுத்துக்கள் பற்றிய குறிப்பு, திருவாலங்காடு செப்பேடுகள் பற்றிய குறிப்பு, துண்டுக் கல்வெட்டு பற்றிய குறிப்பு, முதலாம் ராஜராஜ சோழன் 23ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு பற்றிய குறிப்பு, வீரசோழபுரம் நடுகல் கல்வெட்டு வீர மரபின் நினைவுச் சின்னம் பற்றிய குறிப்பு, கீழ் முக்கூட்டூர் நடுகல் கல்வெட்டு வீர மரபின் அரிய சான்று பற்றிய குறிப்பு, கலைஞர் கருவூலம் (தொடுதிரை வசதியுடன்), நாட்டுடைமை செய்யப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் பட்டியல் மற்றும் தமிழர் தொன்மை, தமிழ் செவ்வியல் நூல்களின் முதல் அச்சுப் பதிப்புகள் (காலம் 1812 ஆம் ஆண்டு முதல் 1935 வரை), கடந்த நான்காண்டுகளில் (மே 2021 முதல் மே 2025 வரை) தமிழ் வளர்ச்சித் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக வெளியிடப்பட்ட தமிழ் செவ்வியல் நூல்கள் கண்காட்சியில் அணி செய்யப்பட்டுள்ளது,

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கலைவாணர் அரங்கம் முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்ச் செம்மொழி குறித்த கண்கவர் கண்காட்சி 3.6.2025 (செவ்வாய்க்கிழமை) முதல் 9.6.2025 (திங்கட்கிழமை) வரை (ஒரு வார காலத்திற்கு) நீட்டிக்கப்படுகிறது. இதனை, பொது மக்கள், பள்ளி/கல்லூரி மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழறிஞர்கள், வரலாற்று அறிஞர்கள் எவ்வித கட்டணமுமின்றி நாள்தோறும் காலை 10.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்வையிடலாம்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் நேற்று முன்தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் தமது மூத்த மகன் இரா.அருள்செல்வனுடன் சென்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கலைஞர் அவர்களின் இல்ல உதவியாளர் எஸ்.மோகன் உள்ளார்.